செய்யப்பட்டிருக்கிறதா என்று பார்ப்பதற்கும், அதைப்போன்று தேவைப்படும் இடங்களில் கூட்டவும் ஒரு சிபார்சு செய்யப் பட்டிருக்கிறது. அந்த முறையிலே ஒரு அப்பாயின்ட்மெண்ட் போர்டை ஏற்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, இங்கே நான் பதில் சொல்கிற பொழுது 7.5—க்கும் மேற்படாமல் தொழிலாளர்களை வைத்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறேன். அடுத்தபடியாக இங்கே. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் மேலாளர் இலஞ்சம் வாங்கிக் கொண்டு தற்காலிகமாக ஆட்களை எ த்துக்கொண்டிருக்கிறார்கள் என்றெல்லாம் இங்கே சொன்னார்கள், அங்கே நோட்டீஸ் போடப்பட்டிருப்பதாகக் கூடச் சொன்னார்கள். நோட்டீஸ் போட்டதை வைத்து நாம் நடவடிக்கை எடுத்துவிட முடியாது. அதை வைத்துக்கொண்டு மட்டும் நாம் நம்பிவிட முடியாது. ஆனால் விசாரித்து உண்மை என்னவோ அதற்கேற்ப நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது. பயிற்சிக்காக நாம் சிலரை எடுக்கிறோம். நேரடியாக எடுக்கும்பொழுது அவர்களுக்குப் பயிற்சியில்லாத காரணத்தால் தேவையான வேலையை ஒழுங்காகச் செய்ய முடியவில்லை என்ற காரணத்தால் அவர்களுக்குப் பயிற்சியைக் கொடுத்து அதற்கு பின்பு அவர்கள் முறையாகப் பயிற்சி பெற்ற பின்பு முழுநேர ஊழியர்களாக அவர்களை வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. அதற்கு மத்திய அரசாங்கம்கூட உதவியைச் செய்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட அடிப்படையிலே எடுத்திருப்பார்களேயொழிய நேரடியாக வேண்டுமென்று அவர்களுக்காக எடுத்திருக்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். இருந்தாலும் கண்காணிக்கப்படும்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கான பேருந்து உரிமச்சீட்டு

குறுகியகால வினா எண்— 22 திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சட்டமன்ற உறுப்பினர்கள் கட்டாயமாக பஸ் பாஸ் கையில் வைத்துத்தான் பயணம் மேற்கொள்ள வேண்டும் என்ற உறுதியான உத்தரவை அரசு அறிவிக்குமா?

(ஆ) ஏழை நடத்துனர்கள், மரியாதையாலும் அச்சத்தாலும் பாஸ் நம்பரை கூட எம். எல். ஏ. க்களிடம் கேட்க தயங்கும் நிலை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. சு முத்துசாமி: (அ) பேருந்துகளில் பயணம் செல்பவர்கள் கட்டாயமாக பயணச் சீட்டோ அல்லது அனுமதிச் சீட்டோ வைத்திருக்க வேண்டுமென்று, மோட்டார் வாகன விதிகளின் கீழ் வகை செய்யப் பட்டுள்ளது; இதற்கான புதிய உத்திரவு வழங்க வேண்டிய அவசியம் இல்லை.

(ஆ) ஒரு சில நேரத்தில் அப்படிப்பட்ட பிரச்னைகள் இருப்பதாக தகவல் வந்துள்ளது.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களை, தகவல் வந்துள்ள பிரச்னை யாது என அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, குறிப்பிட்டு யார் மீதும் அவர்கள் இங்கே சொல்லவில்லை. குறிப்பாகச் சில நேரத்திலே அவர்கள் பாஸ் கொண்டு வருவதற்கு மறந்து விடுகிறார்கள், அவர்களிடத்திலே கேட்கக்கூட எங்களுக்குக் கொஞ்சம் அச்சமாக இருக்கிறது; கேட்பது சரியல்ல என்றுகூட நாங்கள் நினைக்க வேண்டியதாக இருக்கிறது என்று தான் அவர்கள் பொதுப்படையாக சொல்லியிருக்கிறார்களே யொழிய, இவர்கள் கொண்டு வரவில்லை என்று பெயரைச் சொல்லி இது வரையில் சொல்லவில்லை எனவே, இந்த மன்றத்தின் மூலமாக நான் கேட்டுக் கொள்வது கூட, அந்தத் தொழிலாளர்கள் பயணச் சீட்டைக் கேட்கிறபொழுதோ அல்லது அந்தப் பாஸைக் கேட்கிற பொழுதோ காட்டக்கூடிய வாய்ப்பை உறுப்பினர்கள் ஏற்படுத்திக் கொள்வதுதான் இதற்கு ஒரு முடிவாக ஏற்படும் என்று நான் கருதுகிறேன்.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கெஸ்டையும் சட்டமன்ற உறுப்பினர்கள் அழைத்துச் செல்லலாம் என்பதன் விளக்கத்தை அமைச்சரவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, அதற்கான விளக்கம் இப்பொழுது கொடுக்க முடியாது. இன்னும் கொஞ்சம் அதைப்பற்றி விவரமாக பேச வேண்டியிருக்கிறது பேரவைத் தலைவர்களோடு. அதைப் பேசிய பின்புதான் அதன்மீது நான் பதிலைச் சொல்ல முடியும்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களிடம் பாஸ் கேட்பது என்பது அவர்கள் கேட்கவே வேண்டியதில்லை. சட்டமன்ற உறுப்பினர்களே காட்ட வேண்டும். ஏனென்றால் கண்டக்டர்களிலே சில பேர்கள் பயப்படக் கூடியவர்கள் இருக்கலாம்; சட்டமன்ற உறுப்பினர்களாயிற்றே, ஏதாவது செய்து விடுவார்களோ என்று. சிங்கப்பூரில் Without demand, Show your pass என்று இங்கிலீஷிலே எழுதியிருப்பார்கள். ஆகவே, டிமாண்ட் அதாவது கோரிக்கை இல்லாமலேயே கண்டக்டரிடம் பாஸை like any government servant காட்ட வேண்டுமென்று எழுதியிருக்கிறார்கள். ஆகவே, சட்ட

1981 மே 14]

மன்ற உறுப்பினர்கள் என்றாலும் கண்டக்டரிடம் பாஸைக் காட்ட வேண்டுமென்று அரசாங்கம் அறிவுறுத்துவதற்கு முன் வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் கேட்டதே அறிவுறுத்தியது போலத்தான். எனவே அரசாங்கம்தான் சட்டமன்ற உறுப்பினர்களை இது அறிவுறுத்த வேண்டுமென்று நினைப்பது அவ்வளவு சரியாக இல்லை. ஆகவே, இதை மற்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், மற்றவர்களுக்கும் சொல்லி அதை நீங்கள் காட்டியாக வேண்டுமென்று சொல்ல வேண்டும். இதை, அரசாங்கத்திற்காக அல்ல, அந்த ஏழை நடத்துனர்களை காப்பாற்றுவதற்காக நீங்கள் செய்தாக வேண்டுமென்ற கோரிக்கையை அல்லது அந்த வேண்டுகோளை நான் இந்த சட்டமன்றத்திலே அந்தத் தொழிலாளர்களுடைய சார்பிலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அது எங்களுடைய கடமை என்றுகூட நான் கருதுகிறேன்.

திரு. எம். தங்கவேல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் ஒரு மெம்பர் தன்னுடைய மனைவியை அழைத்துச் செல்லலாம் என்ற நியதி இருக்கிறது. ஆனால் ரெயில்வேயிலே, எம்.பி.க்கள் தங்களுடைய அட்டென்டர்களை யாவது, யாரையாவது அழைத்துச் செல்லலாம் என்று அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றித்தான் நான் ஏற்கனவே சொன்னேன். அதை இப்பொழுது தலைவரோடு விவாதித்து, உறுப்பினர்களுக்குத் தேவையான நடவடிக்கையை எடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வடாற்காடு மாவட்டத்தில் மண்பாண்டத் தொழில் செய்பவர்களுக்கு

தொழிற் கருவிகள் வழங்கும் திட்டம்.

*வினா எண் 1045—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு கைத்தறி கதர்த்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) வடாற்காடு மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள மண்பாண்ட தொழில் செய்பவர்களுக்கு தொழில் கருவிகள் அரசாங்கம் வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில் கிராமங்கள் வாரியாக எத்தனை நபர்களுக்கு வழங்கப்பட்டது?